**World Tamil Christian Fellowship**
**60, High Worple, Rayners Lane, Harrow**
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# எபேசியர்

## 1. நீங்கள் யாரென்ற அடையாளம் (c) ஆசீர்வாதம் (2)

கடந்தகிழமை ஆசீர்வாதம் என்றால் என்ன என்பதனை ஆழமாய் அவதானித்து பார்த்தோம். இந்தக்கிழமை நாம் பெற்றுக்கொண்டிருக்கும் இந்த ஆசீர்வாதங்கள் எங்கே என்பதனை பார்ப்போம்.

எபேசியர் 1:3-14 வாசிப்போம்.

தேவன் தன்னுடைய பிள்ளைகளை ஆசீர்வதிப்பதை விரும்புகிறார். அவர் நல்லவராய் இருப்பதால் அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார். (ஆதி 1:28) புதிய ஏற்பாட்டில் இந்த ஆசீர்வாதங்களை விபரமாக நாம் காணலாம். மேலும் அந்த ஆசீர்வாதங்கள் எமக்கான நித்தியமான ஆசீர்வாதங்களௌன கற்றுக்கொள்கிறோம்.

மாற்கு 10:29-30

> ‘‘அதற்கு இயேசு பிரதியுத்தரமாக, என்னிமித்தமாகவும், சுவசேஷத்தினிமித்தமாகவும் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயை யாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, இப்பொழுது <u>இம்மையிலே துன்பங்களோடு கூட</u> நூறத்தனையாக வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்மாரையும், பிள்ளைகளையும், நிலங்களையும் மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.’’

இயேசுவைப் பின்பற்றுவதனைக் குறித்து பேதுருவின் கேள்விக்கு இயேசுவின் பதிலானது, நூறத்தனையாய் திரும்பப் பெற்றுக்கொள்வாய் என்பதாகும். (குறிப்பு: மனைவி நூறத்தனையாக திரும்பக் கிடைக்கப்பெறுமென்று குறிப்பிடப்படவில்லை.)

எபேசியர் 1:3 *நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் <u>கிறிஸ்துவுக்குள்</u> உன்னதங்களிலே*

*ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கின்றார்.*

- முதலாவது, நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறீர்கள் - எமது அத்திவாரமாய் இருப்பவர்.
- இரண்டாவதாக, நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் (புனிதர்களாக) பரிசுத்தவான்களாக உயர்த்தப்படுகிறீர்கள்.

நீங்கள் பரலோகத்தில்(இடம்) ஆசீர்வாதங்களால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறீர்கள்.

நீங்களும் நானும் இந்த பூமியில் வாழ்கிறோம். எப்படி பரலோக இடத்து ஆசீர்வாதங்கள் எமக்கு நன்மை பயக்கக்கூடும்?

பரலோக இடத்து ஆசீர்வாதங்களால் ஆசீர்வதிக்கப்படுவதற்கு இந்த பூமியிலே இருப்பது நன்மை பயக்கக்கூடுமோ?

நான் இந்த பரலோக ஆசீர்வாதங்களை எப்படி அடையமுடியும்?

நாங்கள் வெறுமனே மனிதர்கள் மாத்திரமல்ல. வாழ்க்கையை கருத்தில் கொண்டால், அது இந்த பூமிக்குரியது மாத்திரமல்ல. நாம் கிறிஸ்துவின் பரலோக பிரஜைகளும் ஸ்தானாதிபதிகளுமாய் இருக்கிறோம்.

> *''ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறது போல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாதிபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.''* 2கொரிந்தியர் 5:20

ஆகவே, ஸ்தானாதிபதி எப்படி வாழ்கிறார்?

ஸ்தானாதிபதியானவர் தன்னுடைய தாய் நாட்டிற்கான பிரதிநிதியாக இயங்குகிறார். ஸ்தானாதிபதியானவர் எப்பொழுதும் வேறு நாட்டில் வசிக்கிறார் - ஆனால் தனது சொந்த நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தி வாழ்கிறார். அவர்கள் அவர்களுடைய தாய் நாட்டிலிந்து வேறொரு நாட்டிற்கு அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் தாங்கள் ஸ்தானாதிபதிகளாக வாழும் அந்நிய நாட்டின் கலாச்சாரங்களை புரிந்து கொள்ளும் பொறுப்பு அவர்களுக்கு உண்டென்பதனை இது அர்த்தப்படுத்துகிறது. ஆனால் அவர்கள் தங்கள் தாய்நாட்டின் நன்மையை எப்பொழுதும் மனதில் கொண்டு வேலை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

ஸ்தானாதிபதிகள் அதிகமான நிகழ்வுகளில் கலந்துகொண்டு, உரையாற்றி, அந்தந்த நாட்டின் தலைவர்களை சந்திக்கிறார்கள் - இவையனைத்தினதும் நோக்கம் அவர்களுடைய தாய்நாட்டிற்கும், அவர்கள் ஸ்தானாதிபதிகளாக நியமிக்கப்பட்டிருக்கும் நாட்டிற்கும் இடையிலான உறவை மேம்படுத்துவதாகும்.

தன்னுடைய நாட்டின் விருப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தி, தன்னுடைய தாய் நாட்டின் பிரஜைகளுக்கான பிரதிநிதியாக இருப்பதுடன், அவர்களுடைய நன்மையையும், பாதுகாப்பையும் அவர் கவனிக்கவேண்டியவராக இருக்கிறார்.

ஸ்தானாதிபதியின் வசிப்பிடமும், காரியாலயமும், பொதுவாக தூதரகமென்று அறியப்படுகிறது. இது அவர் வாழும் நாட்டினால் அல்ல; அவரது தாய் நாட்டினால் நிர்வகிக்கப்படுகிறது. உதாரணமாக அமெரிக்காவிலுள்ள பிரித்தானிய தூதரகமானது, அமெரிக்க சட்டங்களுக்கமைய அல்ல, பிரித்தானியாவின் சட்டதிட்டங்களுக்கமைய நிர்வகிக்கப்படுகிறது. ஆகவே அமெரிக்க நிலத்தில் தூதரகம் அமைந்திருந்த போதிலும், அமெரிக்க பொலிசார் அல்லது நீதி அந்த தூதரகத்திற்கு உட்புக வேண்டுமானால் பிரித்தானிய அரசாங்கத்தின் விசேட அனுமதியுடனேயே அதனைச் செய்ய வேண்டும்.

ஸ்தானாதிபதிகள் வேறுபட்ட தலைமைத்துவங்களோடும் குழுக்களோடும் பணியாற்ற வேண்டியுள்ளது, அவர்கள் அநேக காரியங்களைக் குறித்து தகவல் திரட்ட வேண்டியுள்ளதோடு தொடர்ந்து அறிக்கைகளை தமது தாய் நாட்டிற்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. அவர்களது தாய் நாடானது ஸ்தானாதிபதி கொடுத்த அறிக்கையின்படி, அதனடிப்படையில் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும்.

நாம் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள், எனவே

1. நாம் பரலோகத்திற்குரியவர்களாயினும், கொடுக்கப்பட்ட ஒரு வேலைக்காக இப்பூமியில் வாழ்கிறோம்.
2. நாம் சொந்தமாயிருக்கும் இராஜ்ஜியத்தின் நீதியினாலும் சட்டத்திட்டங்களினாலும் நிர்வகிக்கப்படுகிறோம்.
3. எமது இராஜ்ஜியத்தின் வளர்ச்சிக்கு உதவிசெய்தல் எமது பொறுப்பாகும். பரலோக இராஜ்ஜியத்தின் வளர்ச்சிக்காக நிகழ்ச்சிகளையும், உரைகளையும் ஒழுங்குசெய்தல்.
4. எமது தேவைகள் அனைத்தும் பரலோக இராஜ்ஜியத்தினால் சந்திக்கப்படும்.
5. எமது இராஜ்ஜியத்தின் கலாச்சாரத்தை விட வித்தியாசமான கலாச்சாரத்தில் வாழ்கின்ற போதிலும் அதனை நன்றாக புரிந்து கொள்ளல். எப்படியாயினும் நாம் பரலோக இராஜ்ஜியத்திற்காக இதனை இங்கே பயிற்சி செய்கிறோம்.

*‘‘<u>நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது</u>, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.’’* பிலிப்பியர் 3:20

*‘‘ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் <u>தேவனுடைய வீட்டாருமாயிருந்து</u>,’’* எபேசியர் 2:19

*‘‘என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். <u>ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்.</u>’’* யோவான் 14:2

*‘‘நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை. <u>வரப்போகிறதையே</u> நாடித் தேடுகிறோம்.’’* எபிரேயர் 13:14

*‘‘அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு <u>அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது.</u>’’ 1 பேதுரு 1:4,5*

*‘‘ஆகையால், என் பிதா <u>எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்.</u> நீங்கள் என் ராஜ்யத்திலே என் பந்தியில் போஜன பானம் பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந் தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள் என்றார்.’’* லூக்கா 22:29-30

இறுதியாக, இயேசு மரணத்தினின்று உயிர்த்தெழுந்தபோது, அவர் நமக்கு கொடுத்த மகா பெரிய ஆணையிலே அவர் நம்மோடு இருப்பதாக குறிப்பிட்டிருந்தார். ஆனால் இப்போது அவர் வல்லமையோடும் <u>*பூமியின்மீதும், வானத்தின் மீதுமுள்ள அதிகாரத்தோடும்*</u> அதைச் சொல்லுகிறார்.

மத்தேயு 28:18-20

> *‘‘அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.’’*

வானத்திலும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பது ஏனென்று எப்போதாவது நீங்கள் ஆச்சரியப்பட்டதுண்டா?

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று இயேசு சொல்லியது ஏன்?

யோவான் 3:1-13, இல் இயேசு நிக்கோதேமுவுக்கு கற்பித்ததிலிருந்து, இயேசு எப்படி இப்பூமியில் வாழ்ந்தாரென்பது தெளிவாகிறது.

வசனம் 13 இல், ‘‘பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனே யல்லாமல், பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை.’’

இயேசு இவ்வுலகிலிருந்தபோதிலும் அவர் தான் பரலோகத்திலிருக்கிறவரென்பதை தெரியப்படுத்தினார். நீங்கள் மாம்சத்தில் பிறக்கும்போது, நீங்கள் மாம்சத்திற்குரியவைகளை அறிவீர்கள். அதைப்போன்று நீங்கள் ஆவியிலே பிறக்கும்போது உங்களால் ஆவிக்குரிய காரியங்களை காண முடியும்.

பழைய ஏற்பாட்டில், தேவன் தம்மை வெளிப்படுத்தினாலேயன்றி, மக்கள் தேவனை அணுக முடியாது. அவர்களுடைய ஜெபமானது ‘‘தேவனே, வானத்தை திறந்து உம்மை எமக்கு காண்பித்தருளும்’’ என்பதாகும்.

> ‘‘*தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி, உருக்கும் அக்கினி எரியுமாப் போலவும், அக்கினி தண்ணீரைப் பொங்கப்பண்ணுமாப் போலவும், பர்வதங்கள் உமக்குமுன்பாக உருகும்படி செய்யும்.’’* ஏசாயா 64:2

இந்த வானமானது இயேசு ஞானஸ்நானம் பெறும்போது திறக்கப்பட்டது.

> *‘‘அந்த நாட்களில், இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்து, யோர்தான் நதியில்*

*யோவானால் ஞானஸ்நானம் பெற்றார். அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, வானம் திறக்கப்பட்டதையும், ஆவியானவர் புறாவைப் போல் தம்மேல் இறங்குகிறதையும் கண்டார். அன்றியும், நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.''* மாற்கு 1:9-11

இயேசு செய்த அனைத்துக் கிரியைகளும் பரலோகத்தைக் குறித்ததாகவே இருந்தது. பரலோக உண்மைகளை உணர்த்துவதாகவும் இருந்தது. இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது அவர் எந்த அற்புதத்தையும் செய்யவில்லையென்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

இயேசு கல்வாரிக்கு போகுமுன் பூமியிலிருந்தபோது, எம்மால் அவர் செய்ததைப்போல செய்ய முடியுமென்றும் அவர் செய்ததைவிடவும் பெரிதான காரியங்களை செய்ய முடியுமென்றும் சொல்லியிருந்தார்.

யோவான் 14:12 ''மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.''

அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, இயேசு பிதா ''வாக்குத்தத்தம்'' பண்ணினதைப்பெறும்படி எருசலேமிலே காத்திருக்கும்படி கூறினார்.

*''எழுதியிக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந் தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும், மனந்திரும்புதலும், பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். ,''* லூக்கா 24:46-49

இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர் உயிர்த்தெழுந்தபின் அவர் மறுபடியுமாக சொல்கிறார்.

*''ஆகையால் நீங்க்ள எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம்*

*நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்.'*
அப்போஸ்தலர் 1:5

## வாக்குத்தத்தம்

வேதாகமத்தில் அநேக வாக்குத்தத்தங்கள் உண்டு – 6000 மேற்பட்ட வாக்குத்தத்தங்கள் உள்ளதென வேதாகம அறிஞர்கள் சொல்கிறார்கள். ஆனால் ஒன்றே ஒன்றுமட்டுமே "பிரதான வாக்குத்தத்தம்" என்று அழைக்கப்படுகின்றது. அந்த "வாக்குத்தத்தமானது" பிதாவினிடமிருந்து வரும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானமே.

இயேசு இந்த மகா வாக்குத்தத்ததைப்பற்றி சொல்லும்போது, அது நிறைவேறும்வரைக் காத்திருக்கும்படி தனது சீஷர்களுக்கு சொல்கிறார்.

> *''அன்றியும் அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான். நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினால ஞானஸ்நானம் பெறுவீர்கள்''*
> அப்போஸ்தலர் 1:4
>
> ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.'' அப்போஸ்தலர் 1:8

பரிசுத்த ஆவியானவரால் நீங்கள் ஞானஸ்நானம் பெறுவீர்களானால், பூமியின் கடைசிபரியந்தமும் இயேசுக்கிறிஸ்துவுக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்.

> *''பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கம் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.''* அப்போஸ்தலர் 2:1-4

பெந்தெகொஸ்தே நாளிலே, பரிசுத்த ஆவியானவரால் அவர்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்கள அந்நிய பாஷைகளிலே பேசினார்கள். அவர்கள் பிதாவின் வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொண்டார்கள். ஆகவே நாம் பரலோகத்தை அணுக வாசல் திறக்கப்பட்டிருக்கிறது.

இயேசு எப்படி இப்பூமியில் வாழ்ந்தார்?

அவருடைய முழு வாழ்க்கையும் தேவன் எதைச்செய்ய வாஞ்சிக்கிறாரென்பதையே நோக்கியதாக இருந்தது. எனவே அவர் அதனையே இலகுவாகச் செய்தார். அவருடைய கிரியைகள் அவருடைய சரீரம், ஆவி, ஆத்துமா - தேவனால் நிறைந்திருந்தது.

**கண்**



மனித வாழ்க்கைக்கு சரீர கண்ணானது எவ்வளவு முக்கியமென்பதை நாம் அறிந்திருக்கிறோம். 90%விதமான நம்முடைய படிப்பினைகள் நம்முடைய கண் காண்பதினாலேயே அமைகிறது.

> ''*அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்* *__பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ,__* *அதையேயன்றி,* *__வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்.__* *அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.* யோவான் 5:19

இயேசுவின் கண்கள் எப்போதும் தேவன் எதைச் செய்கிறாரென்பதை அவதானித்தப்படியே இருந்தன!

காது:



கண்களை அடுத்து, எமது காதுகளாலேயே அடுத்தபடியாக அநேக காரியங்களை கற்றுக்கொள்கிறோம். ரோமர் 10:17 நாம் அனைவரும் அறிந்ததே. ‘‘ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.’’ ஆகவே நீங்கள் தேவன் என்ன சொல்கிறாரென்று கேட்பதற்கு உங்கள் செவிகளை சாய்த்தால், உங்கள் வழிகளில் நீங்கள் சரியாய் இருப்பீர்கள்.

> *‘‘நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை. நான் கேட்கிறபடியே நியாயந் தீர்க்கிறேன். எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியல் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது.’’* யோவான் 5:30

வாயும் பேச்சும்:



இயேசு தன் பிதாவிடம் எதைக் கேட்டாரோ அதையே பேசினார். அவர் தாமாகவே பேசவில்லை. மத்தேயு 12:34 இன்படி, ''*இருதயத்தின நிறைவினால் வாய் பேசும்*''. ஆகவே, பேச்சானது உள்ளான இருதயத்தில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் காரியங்களிலிருந்தே உங்களில் வெளிப்படுகிறது. மேலும் நீங்கள் கேட்டவைகளும், நீங்கள் கற்றுக்கொண்டவைகளிலிருந்தும் வெளிப்படும்.

ஆகவே, இயேசு பேசும்போதும், கற்றுக்கொடுக்கும் போதும் அவர் பிதாவிடம் கேட்ட காரியங்களையே உறுதியாக கூறினார்.

> *''ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், <u>நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல்,</u> <u>என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன்</u> என்றும் அறிவீர்கள். என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார், பிதாக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியே இருக்கவிடவில்லை என்றார்.''* யோவான் 8:28-29

> *''நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியத இன்னதென்றும் உபதேசிக வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன். ஆகையால் நான் பேசுகிறேன் என்றார்.'' யோவான் 12:49-50*

## உணவு

இயேசு என்ன சாப்பிட்டார்? அவர் மரக்கறி உணவு உண்பவரா? அல்லது மாம்சம் உண்பவரா?

அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில், இயேசு சாத்தானால் உணவுமூலம் சோதிக்கப்பட்ட போது, இயேசு பதிலளித்து சொன்னதாவது, உணவு முக்கியமானதல்ல, ஆனால் தேவனுடைய சத்தத்திற்கு செவிசாய்த்தல் அதனைவிட முக்கியமானதென்றார்.

மத்தேயு 4:4, ''அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.''

யோவான் புத்தகத்தில் நாம் இன்னொரு உதாரணத்தை காண்கிறோம். இயேசு பசியாயிருக்கும் போது சீஷர்கள் அருகிலிருக்கும் நகரத்திற்கு உணவு வாங்குவதற்காக செல்கின்றனர். அதேநேரத்தில் இயேசு சமாரியா தேசத்தின் பெண்கள் தண்ணீர் மொண்டு கொள்வதற்காக வரும் கிணற்றில் அமர்ந்திருந்தார். இயேசு தீர்க்கதரிசனமாக அவளோடு பேசி, அவளுக்கு ஊழியம் செய்தார். சீஷர்கள் உணவோடு திரும்பி வரும்போது, இயேசு தனக்குப் பசிக்கவில்லையென்கிறார்.

யோவான் 4:31-34, இப்படி நடக்கையில் சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, போஜனம் பண்ணுமென்று வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவர்: நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்குண்டு என்றார். அப்பொழுது சீஷர்கள் ஒருவரையொருவர் பார்த்து: யாராவது அவருக்குப் போஜனம் கொண்டுவந்திருப்பார்களோ என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: *நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது.*

எனவே, இயேசு வாழ்வதற்காக சாப்பிட்டார், சாப்பிடுவதற்காக வாழவில்லை, அவருடைய பிதா சொன்னபடியே அவர் வாழ்ந்தார்.

## அவருடைய வாழ்க்கையின் நோக்கம்

யோவான் 6:38, *என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்.*

யோவான் 8:29, *என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியே இருக்கவிடவில்லை என்றார்.*

## பிதாவைக் காண்பியும்

இறுதியாக, சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னிரவு, இயேசு மேல்வீட்டறையில் தன் சீஷர்களுடன் பேசும்போது, யோவான் 14ம் 16ம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ‘‘தேவனே பிதாவை எமக்குக் காண்பியும்’’ என்று இயேசுவின் சீஷனான தோமா கேட்டார். இயேசுவின் பதிலானது, யோவான் 14:10, நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை. என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்.

யோவான் 20:21, ''*இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக: பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி,"*

எமது நோக்கம் இயேசு கிறிஸ்துவைப் போலாகுதலாகும், ரோமர் 8:28-29, ''*அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்."*

*இயேசு இப்பூமியில் வாழ்ந்ததுபோல நீங்களும் நானும் வாழ முடியும். இது தேவன் நம்மை ஆசீர்வதிக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதமாகும்!*

ஆகவே எமது அனைத்து பரலோக ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள் அமைகிறது. ''கிறிஸ்துவுக்குள்'' - திறப்பாயிருக்கிறது!

*2 கொரிந்தியர் 1:20, எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.*

ஆகவே ஆசீர்வாதத்தை அல்ல, ஆசீர்வதிப்பவரைத் தேடுங்கள். ஏனென்றால், நீங்கள் அவருக்குள் ஏற்கனவே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆகவே அவருக்குள் உங்கள் வாழ்க்கையை வாழுங்கள்.